## 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **C.** ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **576 / 2024** நாள்: **10.03.2025** வா.சா.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரிமளம் | தொழில் | : | Water Man, Water Board |
| த/பெ | : | முருகன் | கிராமம் | : | வேடப்பட்டி |
| வயது | : | 58 | தாலுகா | : | மடத்துக்குளம் |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

முதல் விசாரணை -

நான் இந்த வழக்கில் 4ம் வாதி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.1 – 08.07.1992 தேதியிட்ட ராஜம்மாள் பெயரில் உள்ள ஏ செட்யூல் சொத்தான கணியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.681/1992 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் சான்று நகல்

வா.சா.ஆ.2 – 21.08.2022 தேதியிட்ட ராஜம்மாள் பெயரில் உள்ள பி செட்யூல் சொத்தான திருப்பூர் மாவட்டம், நல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2026/2002 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் சான்று நகல்

வா.சா.ஆ.3 – 26.06.2021 தேதியிட்ட ராஜம்மாள் இறப்பு சான்றிதழ் நகல்

வா.சா.ஆ.4 – 03.06.2024 தேதியிட்ட ராஜம்மமாளின் வாரிசு சான்றிதழ் நகல்

வா.சா.ஆ.5 – தாவா ஏ மற்றும் பி செட்யூல் சொத்தின் பட்டா நகல் (2 எண்ணிக்கை)

வா.சா.ஆ.6 – தாவா ஏ மற்றும் பி செட்யூல் சொத்தின் வில்லங்க சான்றிதழ் நகல் (2 எண்ணிக்கை)

வா.சா.ஆ.7 – 1 முதல் 4 வாதிகளின் ஆதார் அட்டை நகல் (4 எண்ணிக்கை)

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–C.Rajalingom.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.